**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P
நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு
2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 17–ம் நாள் புதன்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆனி மாதம் 03–ம் நாள்)
**CNR.No.TNED040060562020**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.302/2020**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
ஈரோடு வடக்கு காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண். 181/2020 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

A1) பிரபு (வயது 34/2026),
த/பெ. ரவி,
69/328 சூரியம்பாளையம் பெருமாள் மலை,
R.N.புதூர், ஈரோடு.

A2) நந்தக்குமார் (எ) நந்து (வயது 28/2026),
த/பெ. நம்பிராஜன்,
22, காந்தி நகர், பெருமாள் மலை,
R.N.புதூர், ஈரோடு ... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 16.03.2020–ம் தேதி 22.30 மணி முதல் 17.03.2020–ம் தேதி 08.30 மணிக்குள் | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 20.03.2020 | |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | A1-22.04.2020<br>A2-18.06.2020 | A1-10.06.2020<br>A2-25.07.2020 |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:02 +0530

| | | |
|---|---|---|
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 31.08.2020 |
| 5. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள் | 30.05.2022 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | 1) 1–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4033/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 06.05.2020–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>2) 1–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4056/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 13.05.2020–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>3) 1–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4080/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 22.05.2020–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>4) 1–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4093/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 28.05.2020–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>5) 2–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4232/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 07.07.2020–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>6) 2–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.4288/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 24.07.2020–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. |



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:07

<table>
<tr><td></td><td></td><td colspan="3">7) C.M.P.No.4347/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 451/457–ன் கீழான மனு கடந்த 14.08.2020–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>8) 1–ம் எதிரி தாக்கல் செய்த Crl.M.P.No.1077/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 439–ன் கீழான மனு ஈரோடு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 09.06.2020–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>9) 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட C.M.P.No.11444/2022–ல் மனு கடந்த 13.09.2022–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>10) அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட M.P.No.9/2026–ல் மனு கடந்த 04.06.2026–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="7">7.</td><td rowspan="7">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>06.07.2022</td><td>02.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>06.07.2022</td><td>12.12.2022</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>06.07.2022</td><td>12.12.2022</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>20.05.2026</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>20.05.2026</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">09.06.2026</td></tr>
</table>



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:13 +0530

| | | | |
|---|---|---|---|
| 9. | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | 27.07.2023-A1<br>01.03.2023-A2 | 02.09.2023-A1<br>04.03.2023-A2 |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 09.06.2026 | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 17.06.2026 | |

இவ்வழக்கானது கடந்த 01.09.2020–ம் தேதி, C.C.No.302/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.கமலக்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–<u>தீர்ப்புரை</u>–**

இந்த வழக்கு குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 173(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 16.03.2020–ம் தேதி முதல் 17.03.2020–ம் தேதி 22.30 மணிக்குள், ஈரோடு, பெருந்துறை ரோடு, வீரப்பம்பாளையம் பிரிவு அருகில் வேல் மோட்டார்ஸ் கார் ஒர்க் ஷாப் முன்பு உள்ள காலியிடத்தில் சாட்சி–1 ஜெயச்சந்திரன் என்பவருக்கு சொந்தமான TN 09 BD 5085 எண்ணுள்ள Toyoto Innova காரின் மதிப்பு ரூ.10,00,000/– உள்ளதை எதிரிகள் தங்களது சுயலாபம் கருதியும், சாட்சி–1 க்கு நஷ்டத்தை உண்டாக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திருடி சென்றுள்ள குற்றத்திற்காக எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக ஈரோடு வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:22 +0530

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b) ன் படி உத்தரவிடப்பட்டு 1 மற்றும் 2 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு அரசுதரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து வினவியபோது 1 மற்றும் 2 எதிரிகள் குற்றத்தை மறுத்துள்ளார்கள். ஆவணங்களை ஆராய்ந்ததன் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றம் விசாரிக்கக்கூடிய குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என அனுமானம் செய்ய போதிய காரணங்கள் இருந்ததால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 240(1)–ன் படி 1 மற்றும் 2 எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 242–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 13 சாட்சிகளில், 6 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகளாக ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1–ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:27 +0530

**<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

6. கடந்த 14.03.2020–ம் தேதி அ.சா.1 திரு.ஜெயசந்திரனிடம் அவருடைய வாடிக்கையாளர் டொயோட்டா இனோவா காரை பழுது பார்ப்பதற்காக கொடுத்திருந்தார் என்றும், அ.சா.1–னுடைய ஒர்க்ஷாப்பில் பழுது பார்ப்பதற்காக வைத்திருந்ததாகவும், 16.03.2020–ம் தேதி இரவு வேலையை முடித்துவிட்டு வாகனத்தை நிறுத்தியிருந்ததாகவும், வீட்டிற்கு சென்றுவிட்டு 17–ம் தேதி வந்து பார்த்தபோது அந்த கார் காணாமல் போனது தெரியவந்தது என்றும், வாடிக்கையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரியவில்லை என கூறினார் என்றும், பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை என்றும், ஆகவே வடக்கு காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் அளித்துள்ளார்.

(ii) பின்னர் இதுசம்மந்தமாக கடந்த 20.03.2020–ம் தேதி, 14.00 மணிக்கு, அ.சா.1 திரு.ஜெயசந்திரன் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 எழுத்து மூலமான புகாரை சாட்சி–11 உதவி ஆய்வாளர் திரு.ஜெயரத் பெற்று குற்ற எண்.181/2020, சட்டபிரிவு 379 இதசவின் கீழ் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை வாதியின் அசல் புகாருடன் இணைத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 க்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

(iii) பின்னர் சாட்சி–12 காவல் ஆய்வாளர் திரு.சிவக்குமார் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே பகல் 15.00 மணிக்கு, சம்பவம் இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முத்துகுமரன், அ.சா.3 திரு.சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், வழக்கு சாட்சிகள் அ.சா.1 திரு.ஜெயசந்திரன், அ.சா.2 திரு.அண்ணாமலை, சாட்சி–3 திரு.சங்கர், சாட்சி–4 திரு.சிவா, சாட்சி–5 திரு.முத்துக்குமரன், அ.சா.3 திரு.சக்திவேல் ஆகிய சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:33 +0530

செய்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடியபோது 22.04.2020–ம் தேதி அதிகாலை வடக்கு காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளில் கண்ட எதிரிகள் மற்றும் களவு சொத்துகளை கண்டுபிடிக்கும் பொருட்டு நிலைய சரகத்தின் ரோந்து அலுவலராக 04.00 மணியளவில் பெருந்துறை ரோடு, மாருதி நகர், வில்லரசம்பட்டி, எல்லபாளையம் ஆகிய பகுதிகளில் ரோந்து அலுவல் செய்து பின் கன்னிராவுத்தர் குளம் குறிஞ்சி பேக்கரி முன்பு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது அங்கு சந்தேகம் அளிக்கும் வகையில் இன்னோவா காரை நிறுத்தாமல் சென்றவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் பிரபு என்று கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் அ.சா.4 திரு.முருகானந்தம், அ.சா.5 திரு.வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் ஆஜர் செய்த அ.சா.பொ.1 புகைப்படத்தில் கண்டுள்ள TN 09 BD 5085 என்ற சில்வர் நிறம் உள்ள Toyoto Innova காரை கைப்பற்றி அ.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி வழக்கு சொத்தை அ.சா.ஆ.10 படிவம் 91–ன் மூலம் அனுப்பியும், பின்னிட்டு 1–ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி இவ்வழக்கின் மற்றொரு எதிரியை தேடியபோது 18.06.2020–ம் தேதி குறிஞ்சி பேக்கரி முன்பு நின்றிருந்த நபர் போலீசை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் நந்தகுமார் என்று கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் சாட்சி–9 திரு.கிருஷ்ணமூர்த்தி, சாட்சி–10 திரு.கணேசன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், இறுதியாக தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:40 +0530

பகுதியை விளக்கி குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்துள்ளார்கள். எனவே 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததால் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டு எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு:–**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகள் தான் குற்றச்சம்பவத்தை புரிந்தார்கள் என நிரூபணம் செய்யக்கூடிய வகையில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், மேலும் அ.சா.1 தன்னுடைய குறுக்குவிசாரணையில் தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், தனக்கு இவ்வழக்கை மேல்நடத்த விருப்பம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மற்றும் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 ஆகிய சாட்சிகள் குற்றங்கள் குறித்து அவருடைய முதல்விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியங்கள் அளித்துள்ளார்கள் என்றும், மேலும் இந்த வழக்கில் புலன்விசாரணை



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:45 +0530

குறித்து அ.சா.6 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11. அ.சா.1 இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் என்பதும், அ.சா.2 இவ்வழக்கில் திருட்டுபோன காரின் உரிமையாளர் என்பதும், அ.சா.3 பார்வை மகஜர் சாட்சி என்பதும், அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் என்பதும், அ.சா.6 இவ்வழக்கின் புலன்விசாரணை அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய ஈரோடு வடக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. அ.சா.1 திரு.ஜெயசந்திரன் ஈரோடு, பெருந்துறை ரோடு ஜெயசூர்யா டிபார்ட்மெண்ட் ஸ்டோர் எதிர் ரோட்டில் வேல் மோட்டார்ஸ் என்ற பெயரில் கடந்த 10 வருடங்களாக கார் பட்டறை நடத்தி வருவதாகவும், அ.சா.1–யிடம் கடந்த 14.03.2020–ம் தேதி சனிக்கிழமை காலை சுமார் 9.00 மணிக்கு, அ.சா.1–ன் வாடிக்கையாளரான கணேஷன் என்பவரின் மகன் அ.சா.2 அண்ணாமலை என்பவர் அவருக்கு சொந்தமான TN 09 BD 5085 என்ற சில்வர் நிறம் உள்ள Toyoto Innova காரை ரிப்பேர் செய்வதற்கு ஓர்க்ஷாப்பில் கொண்டு வந்து அ.சா.1–யிடம் காரை விட்டுவிட்டு சென்றதாகவும், அ.சா.1 கடந்த 16.03.2020–ம் தேதி மேற்படி காரை இன்ஜினில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்து விட்டு அன்று இரவு 10.30 மணிக்கு வழக்கம் போல் அ.சா.1 நிறுத்தும் இடத்தில் ஓர்க்ஷாப் முன்பு நிறுத்தி விட்டு காரை பூட்டிவிட்டு அ.சா.1–ன் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், மறுநாள் 17.03.2020–ம் தேதி, காலை 8.30 மணிக்கு, அ.சா.1 ஓர்க் ஷாப்பிற்கு வந்து வேலை பார்த்து கொண்டிருந்ததாகவும், சிறிது நேரம் கழித்து மேற்படி காரை பார்த்த போது கார் காணவில்லை என்றும், அ.சா.1–ம் அக்கம் பக்கம் எல்லாம் தேடி பார்த்தும் விசாரித்தும் இது நாள் வரை அ.சா.1–ன் வாடிக்கையாளரின் Innova காரை காணவில்லை என்றும், கடந்த 16.03.2020–ம் தேதி, இரவு 10.30 மணிக்கு, நிறுத்திவிட்டு சென்ற காரை யாரோ திருடிசென்று விட்டார்கள்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:51 +0530

என்றும், திருட்டு போன காரின் இஞ்ஜின் No-2KD6518151, அதன் சேஸ் நெம் MBJIIJV4007217444 மாடல்-2010, மதிப்பு சுமார் ரூபாய்.10,00,000/- என்றும், திருட்டு போன அ.சா.1-ன் வாடிகையாளரின் மேற்படி காரை கண்டுபிடித்து தருமாறு அ.சா.1 திரு.ஜெயசந்திரன் அ.சா.ஆ.1 புகார் அளித்ததன் அடிப்படையில் அ.சா.ஆ.7-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

13. இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.ஜெயசந்திரன் தன்னுடைய முதல் விசாரணையில் புகார் மனு சங்கதிகளை ஒத்துரைத்தும், மேலும் வடக்கு காவல் நிலையத்தில் வாகனம் கிடைத்துவிட்டதாக தகவல் கூறினார் என்றும், காவல் நிலையத்திற்கு தானும், வாடிக்கையாளரும் சென்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ளது அந்த வாகனம் தான் என்றும், வாடிக்கையாளர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வண்டியை பெற்றுக்கொண்டார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 தன்னுடைய குறுக்குவிசாரணையில் இந்த வழக்கில் தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், இவ்வழக்கை தான் மேல் நடத்த விரும்பவில்லை என்றும், இவ்வழக்கில் இருந்து எதிரிகளை விடுவிக்க தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும், வண்டி காணாமல் போன சமயத்தில் தான் ஒரு முறை காவல்நிலையம் சென்றபோது போலீசார் தன்னிடம் வெற்று தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், வண்டியின் ஆர்சி புக் நீதிமன்றத்தில் உள்ளதால் தனக்கு அது கிடைத்தால் போதும் என்றும், இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் தனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றும், புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தனக்கு ஞாபகம் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளிடமும் காவல்நிலையத்தில் போலீசார் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதி, நேரத்தில் புகார் தரவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் தனக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல என்று முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே முன்னுக்குப்பின் முரணான அ.சா.1-ன் சாட்சியம் நம்பும் படியாக இல்லை



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:05:56 +0530

என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட திருட்டுபோன காரின் உரிமையாளரான அ.சா.2 திரு.அண்ணாமலை தன்னுடைய முதல்விசாரணையில் அ.சா.1 ஜெயசந்திரனை தனக்கு தெரியும் என்றும், அவர் கார் ஒர்க் ஷாப் வைத்துள்ளார் என்றும், தன்னுடைய வாகனம் இனோவா அதனுடைய பதிவு எண் TN 09 BD 5085, 14.3.2020-ம் தேதி அ.சா.1 யிடம் தன்னுடைய டொயோட்டா இனோவா வாகனத்தை பழுது பார்ப்பதற்காக கொடுத்திருந்ததாகவும், 17.3.2020-ம் தேதி காலை தன்னை தொடர்பு கொண்டு வண்டியை நிறுத்தியிருந்த இடத்தில் காணவில்லை என தெரிவித்தார் என்றும், இருவரும் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை என்றும், ஆகவே வடக்கு காவல் நிலையத்தில் 20.3.2020-ல் அ.சா.1 புகார் அளித்தார் என்றும், எதிரியை பிடித்துவிட்டதாக கூறி வண்டி கிடைத்துவிட்டதாக தகவல் கூறினார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ளது அந்த வாகனம் தான் என்றும், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வண்டியை பெற்றுக்கொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தன்னுடைய வண்டிதான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 திரு.சக்திவேல் தன்னுடைய சாட்சியத்தில் 20.3.2020-ம் தேதி, மாலை 3.00 மணிக்கு, அ.சா.1 ஜெயச்சந்திரன் பட்டறை அருகே சென்று கொண்டிருந்ததாகவும், அங்கு போலீசார் மாதிரி வரைபடம் தயார் செய்தனர் என்றும், சாட்சியாக இருக்க கேட்டனர் என்றும், தான் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் கையெழுத்து செய்ததாகவும், அதிலுள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது என்றும், தன்னுடன் சாட்சி-5 முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. இவ்வழக்கின் எதிரிகள் புகாரில் சொல்லப்பட்டுள்ள TN 09 BD 5085 பதிவு எண் கொண்ட Innova காரை திருடியதை பார்த்ததாக எவ்வித சாட்சியும் அரசுதரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை. இந்நிலையில், எதிரிகளை இவ்வழக்குடன் தொடர்பு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:01 +0530

படுத்தக்கூடியது எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் இவ்வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் ஆகும். அ.சா.6 புலன்விசாரணை அதிகாரி கூறுவது போல் எதிரிகள் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுத்தார்களா, அதன் அடிப்படையில் அ.சா.பொ.1 புகைப்படத்தில் கண்டுள்ள Innova கார் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்பதை பரிசீலனை செய்ததில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.4 திரு.முருகானந்தம் தன்னுடைய முதல் விசாரணையில் எதிரி பிரபு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து – அ.சா.ஆ.3 தன்னுடையது தான் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து – அ.சா.ஆ.4 தன்னுடையது தான் என்றும், கடந்த 2020–ம் வருடம் தேதி, மாதம் நியாபகம் இல்லை என்றும், ஒரு நாள் ஒரு வேலையாக ஈரோடு வடக்கு காவல் நிலையம் வழியாக சென்று கொண்டிருந்தபோது தனக்கு தெரிந்த ஜெயசந்திரன் என்பவர் அழைத்ததால் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை.

17. மேலும் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.5 திரு.வேல்முருகன் தன்னுடைய முதல்விசாரணையில் எதிரி பிரபு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து – அ.சா.ஆ.5 தன்னுடையது தான் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து – அ.சா.ஆ.6 தன்னுடையது தான் என்றும், தேதி நியாபகம் இல்லை என்றும், வீரப்பம்பாளையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதால் தான் கையொப்பம் செய்ததாகவும், வழக்கு பற்றி வேறு எந்த விபரமும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:06 +0530

குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா.5–ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும்போது உண்மையில் போலீசார் மேற்படி எதிரிகளிடமிருந்து தான் அ.சா.பொ.1 புகைப்படத்தில் கண்டுள்ள வாகனத்தை கைப்பற்றினார்களா என்பதே சந்தேகத்திற்கு உரிய சங்கதியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. மேற்படி இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1–ன் சாட்சியம் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலும், நம்பும்படியாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 எதிரிகள் தான் மேற்படி குற்றத்தை புரிந்தார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையிலும், தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் புலன் ஆய்வு அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய ஈரோடு வடக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளரான அ.சா.6–ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.6 மூலமாக அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றச் சம்பவத்தை பார்த்த நேரடி சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில், வழக்குச் சொத்து எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதை அரசுதரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது. இந்நிலையில் அ.சா.1 திரு.ஜெயசந்திரன் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து மட்டுமே அ.சா.6–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.6–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:11 +0530

19. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு வழங்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 1 மற்றும் 2 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)–ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

20. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் பிணையில் இருந்ததால் 1 மற்றும் 2 எதிரிகளும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

21. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண்.86/2020–ல் உள்ள TOYOTO INNOVA car TN 09 BD 5085 சில்வர் கலர் காரை அதன் உரிமையாளரான அ.சா.2 திரு.அண்ணாமலை C.M.P.No.4347/2020–ன் கீழ் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் மேற்படி வாகனத்தை பெற்றுச்சென்றுள்ளார். எனவே மேல்முறையீடு காலத்திற்கு பின்னிட்டு மேற்சொன்ன வாகனத்தை அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், பிணைபத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 17–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:16 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.ஜெயசந்திரன் | நிகழ்நிலை புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.அண்ணாமலை | திருட்டுபோன வாகனத்தின் உரிமையாளர் |
| 3. | அ.சா.3 | திரு.சக்திவேல் | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.முருகானந்தம் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு.வேல்முருகன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.சின்னகாமணன் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 06.07.2022 | புகார் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 06.07.2022 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| 3. | அ.சா.ஆ.3 | 20.05.2026 | எதிரி பிரபு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4-ன் முதலாவது கையெழுத்து | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | 20.05.2026 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.4-ன் முதலாவது கையெழுத்து | அ.சா.4 |
| 5. | அ.சா.ஆ.5 | 20.05.2026 | எதிரி பிரபு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5-ன் இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |
| 6. | அ.சா.ஆ.6 | 20.05.2026 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.5-ன் இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:22 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | அ.சா.ஆ.7 | 04.06.2026 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.6 |
| 8. | அ.சா.ஆ.8 | 04.06.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| 9. | அ.சா.ஆ.9 | 04.06.2026 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.6 |
| 10. | அ.சா.ஆ.10 | 04.06.2026 | படிவம் 91 | அ.சா.6 |

**எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசு தரப்புச் சான்று பொருள் : (பி.ஆர்.எண்.86/2020)**

| **வரிசை எண்.** | **அரசு தரப்பு சான்றுபொருள் எண்.** | **குறியீடு செய்யப்பட்ட தேதி** | **குறியீடு செய்யப்பட்ட சான்றுபொருள்** | **யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது** |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | 06.07.2022 | TOYOTO INNOVA car TN 09 BD 5085 சில்வர் கலர் கார் | அ.சா.1 |

<u>குறிப்பு</u> :

1. எதிரிகள் பிணையில் உள்ளார்கள்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.17 10:06:28 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு